26.03.2025

MCOP.No. 865 of 2014

PW1 திரு.பி.முகமது ரபி

முதல் விசாரணை தொடர்ச்சி :-

சாட்சி ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார். என் தரப்பு ஆவணங்களாக கீழே கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகின்றேன்.

1. முதல் தகவல் அறிக்கை ம.த.சா.ஆ.1.

2. விபத்து பதிவேடு ம.த.சா.ஆ.2.

3. இன்சூரன்ஸ் கவர் நோட் ம.த.சா.ஆ.3 (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது)

4. டிஸ்சார்ஜ் சம்மரி ம.த.சா.ஆ.4.

5. மருத்துவ பில்கள் ரூ.12,891/- ம.த.சா.ஆ.5.

6. வங்கி கணக்கு காசோலை ம.த.சா.ஆ.6.

7. என்னுடைய ஆதார் நகல் ம.த.சா.ஆ.7

8. பான் கார்டு நகல் ம.த.சா.ஆ.8. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகின்றேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-

விபத்து சம்பவத்தினால் எனக்கு தான் காயம் ஏற்பட்டது. விபத்து சம்பவம் 11.10.2014 அன்று மதியம் 3.30 - 5.30 மணியளவில் நடைபெற்றது. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் விபத்து சம்பவம் நடைபெற்ற பொழுது நான் சாலையின் ஓரத்தில் நின்றிருந்ததாக கூறப்பிட்டிருக்கின்றது என்றால் சரிதான். இதனை நிருபணம் செய்ய நான் ஏதாவது ஆவணத்தை தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் இல்லை. விபத்து சம்பவத்தினால் என்னுடைய நண்பர்கள் எத்தனை பேருக்கு அடிப்பட்டிருந்தது என்பதை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல விபத்து சம்பவம் உண்மையிலேயே நடைபெற்றிருந்தால் நான் இந்த விவரங்களை

எல்லாம் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றாலும் அவ்வாறு நடைபெறாததால் நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் முருகனுடைய ஓட்டுநரான அவில்பாண்டியனின் ஓட்டுநர் உரிமத்தை நான் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய வண்டிக்கு அடிபட்டதா என்றால், நான் நின்றுகொண்டிருந்த இடத்தில் அருகே இருந்த வண்டி எனக்கு சொந்தமானது கிடையாது. இவ்வழக்கு சம்மந்தமான குற்ற இறுதி அறிக்கையோ, மோட்டார் வாகன ஆய்வறிக்கையோ, மாதிரி வரைபடமோ, பார்வை மகசரோ ஆகியவற்றை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்தால் உண்மையான விபத்து சம்பவம் எப்படி நடைபெற்றது என்று தெரிந்துவிடும் என்பதால், நான் இந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னை இடித்ததாக சொல்லும் 1ம் எதிர்மனுதாருக்கு சொந்தமான வாகனத்திற்கு சொல்லப்படுகின்ற காலத்தில் செல்லத்தக்க காப்பீட்டு பாலிஸி இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாருக்கு சொந்தமான வாகனத்திற்கு செல்லத்தக்க காப்பீடு எதுவும் இல்லாதால், 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடப்பாடுடையது அல்ல என்று சொன்னால் சாயல்ல. நான் தற்பொழுது ஒரு கம்பெனியில் சூப்பர்வைசராக வேலைப்பார்த்து வருகின்றேன். நான் மாதம் ரூ.18 ஆயிரம் சம்பளம் பெற்று வருகின்றேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இடது கால் கட்டை விரலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்திருக்கின்ற ம.த.சா.ஆ.4 டிச்சார்ஜ் சம்மரியில் எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பவத்தினால் எனக்கு சொற்ப காயம் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபவத்தினால் எனக்கு எந்த விதத்திலும் வேலை இழப்போ, வருமான இழப்போ ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாருக்கு சொந்தமான வாகனத்திற்கு செல்லத்தக்க காப்பீடு இல்லாததால் என்னுடைய மனு தள்ளுபடி

செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.